சென்னை மக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு - அடிக்கடி செயலிழந்து போகும்

வானிலை ரேடாரை சரிசெய்ய அவசர நடவடிக்கை தேவை!

பிரதமர் மோடிக்கு தயாநிதி மாறன் எம்.பி. அவசரக் கடிதம்!



சென்னை, அக்.28-

அடிக்கடி செயலிழந்துப்போகும் சென்னையின் 'எஸ்பேண்ட் டாப்ளர்' வானிலை ரேடாரை துரித கதியில் சரிசெய்யக் கோரி, கழகத் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி கழக நாடாளுமன்றக் குழு துணைத் தலைவரும், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் எம்.பி. ஒன்றிய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து பிரதமர் மோடி அவர்களுக்கு எழுதியுள்ள அக்கடித்தத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

சென்னை துறைமுக அறக்கட்டளை நூற்றாண்டு கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ள 'எஸ்பேண்ட் டாப்ளர்' வானிலை ரேடார் மீண்டும் செயலிழந்துள்ள விவகாரம் குறித்து உங்களுக்கு மீண்டும் கடிதம் எழுதுகிறேன். இந்த ரேடார் மீண்டும் செயல்பாடின்றிப் போயிருப்பது, மோசமான வானிலை முன்னறிவிப்புகள் வரவிருக்கும் சூழலில், சென்னையின் வானிலை கண்காணிப்பு மற்றும் பேரிடர் முன்னெச்சரிக்கை திறன்கள் குறித்த கவலையை தீவிரமாக்கியுள்ளது.

இது குறித்து, 2-12-2020 மற்றும் 12-11-2021 ஆகிய தேதிகளில் கடிதங்கள் வாயிலாக உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன்.

மேலும் 08-12-2021, 16-03-2022, 20-07-2022, 07-08-2024 ஆகிய தேதிகளில் மக்களவையிலும் நான் கேள்வி எழுப்பியுள்ளேன்.

எனது தொடர்ச்சியான முறையீடுகளே இந்தச் சிக்கலின் தீவிரத்தையும், அது நீண்டகாலமாக நீடித்து வருவதையும் உணர்த்துகின்றன. நாடாளுமன்றத்தில் அளிக்கப்பட்ட பதில்களில், புவி அறிவியல் அமைச்சகம் (Ministry of Earth Sciences), இந்த ரேடாரில் ஏற்பட்டுள்ள இயந்திரக் கோளாறுகள், உதிரிபாகங்களைப் பெறுவதில் உள்ள சிரமங்கள் மற்றும் 24 மணிநேரமும் தடையின்றிச் செயல்படுவதில் உள்ள தடைகள் ஆகியவற்றை ஒப்புக்கொண்டிருந்தது. தற்போது மீண்டும் இந்த ரேடார் செயலிழந்துள்ளதிலிருந்து நம்பகமான மற்றும் தடையற்ற செயல்பாட்டை உறுதி செய்வதற்கான அடிப்படைச் சிக்கல் இன்னும் முறையாகத் தீர்க்கப்படவில்லை என்பதையே காட்டுகிறது.

சென்னை மாநகரம், கனமழை, நகர்ப்புற வெள்ளம் மற்றும் சூறாவளி போன்ற வானிலை நிகழ்வுகளால் அதிகம் பாதிக்கப்படக்கூடிய ஒரு பகுதியாகும். ஷிBand ரேடார் என்பது இப்பகுதியின் வானிலை கண்காணிப்பு வலையமைப்பில் ஒரு முக்கியமான அங்கமாகும். இது வானிலை அமைப்புகளின் நகர்வு மற்றும் தீவிரத் தன்மை குறித்த மிக முக்கியமான தகவல்களை வழங்குகிறது. செயற்கைக்கோள் கண்காணிப்புகள் மற்றும் எண்முறை வானிலை மாதிரிகள் (Numerical weather models) பயனுள்ளவையாக இருந்தாலும், நம்பகமான, நிகழ்நேர ரேடார் கண்காணிப்பின் தேவையை அவை ஈடுசெய்ய முடியாது.

பொதுப் பாதுகாப்பிற்கான ஒரு முக்கியமான உள்கட்டமைப்பு வசதி, பல ஆண்டுகளாக விடுக்கப்பட்ட கோரிக்கைகள், நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விகள் மற்றும் பழுதுபார்ப்பு அல்லது மாற்றீடு குறித்த வாக்குறுதிகள் இருந்தபோதிலும், மீண்டும் மீண்டும் செயலிழந்து போவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். ஒவ்வொரு பருவமழைக் காலத்திலும், வானிலை கண்காணிப்பு உள்கட்டமைப்பில் ஏற்படும் இத்தகைய தொடர்ச்சியான தடங்கல்களைச் சென்னை மக்கள் எதிர்கொள்ள வேண்டிய சூழல் இருக்கக்கூடாது.

எனவே, இந்த விவகாரத்தில் நீங்கள் உடனடியாக தலையிட்டு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை உறுதி செய்யக் கோருகிறேன் :

1. உடனடி சீரமைப்பு: புவி அறிவியல் அமைச்சகம் (Ministry of Earth Sciences) மற்றும் இந்திய வானிலை ஆய்வுத் துறை (IMD) ஆகியவற்றிற்கு உத்தரவிட்டு, தற்போதைய செயலிழப்பிற்கான துல்லியமான தொழில்நுட்பக் காரணத்தைக் கண்டறிந்து, எவ்விதத் தாமதமுமின்றி ரேடாரை மீண்டும் முழுமையாகச் செயல்பாட்டிற்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. காலக்கெடுவுடன் கூடிய மாற்றீடு: புதிய S-Band டாப்ளர் வானிலை ரேடாரை நிறுவுவதற்கான காலக்கெடுவை நிர்ணயித்து, அதை பொது வெளியில் அறிவிக்க வேண்டும். இதில் ரேடாரை வாங்கும் விவரம், நிறுவுதல், சோதனை செய்தல் மற்றும் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் ஆகிய நிலைகள் குறித்த விவரங்கள் இடம் பெற வேண்டும்.

3. நம்பகமான இடைக்கால ஏற்பாடு: புதிய ரேடார் பயன்பாட்டிற்கு வரும் வரை, சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கடலோர மாவட்டங்களுக்குத் தேவையான மாற்று ரேடார் கண்காணிப்பு வசதியை உறுதி செய்ய வேண்டும். முக்கியமான வானிலை கண்காணிப்புகளில் எந்தவிதத் தடங்கலும் ஏற்படாதவாறு தெளிவான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

4. பொறுப்புக்கூறல் மற்றும் பராமரிப்பு: மீண்டும் மீண்டும் ஏற்படும் செயலிழப்புகள், பராமரிப்பு ஏற்பாடுகளின் தரம் மற்றும் எனது முந்தைய கோரிக்கைகள் மற்றும் நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்குப் பிறகு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஒரு தொழில்நுட்ப மறுஆய்வை மேற்கொள்ள வேண்டும்.

5. எழுத்துப்பூர்வ நிலை அறிக்கை: ரேடாரின் தற்போதைய செயல்பாட்டு நிலை, சமீபத்திய செயலிழப்பிற்கான காரணங்கள், மேற்கொள்ளப்பட்டு வரும் சீரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் தடையற்ற செயல்பாட்டை அடைவதற்கான காலக்கெடு குறித்த விரிவான அறிக்கையை, சம்பந்தப்பட்ட அமைச்சகம் வழங்க உத்தரவிட வேண்டும்.

இந்த விஷயத்தை நான் மீண்டும் மீண்டும் எழுப்புவதற்குக் காரணம், போதிய வானிலை கண்காணிப்பு இல்லாதது சென்னை மற்றும் அண்டை மாவட்ட மக்களின் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்பதால் தான். மீண்டும் மீண்டும் பழுதுபார்ப்பதும், அதன் பிறகு மீண்டும் செயலிழப்பதும் ஒரு நீண்டகாலத் தீர்வாக இருக்க முடியாது.

இந்த விவகாரத்தில் நீங்கள் உடனடியாக தலையிட்டு சம்பந்தப்பட்ட அமைச்சகம் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பதில் அளிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். சென்னையின் பேரிடர் தயார்நிலை என்பது, பழுதடைந்த உள்கட்டமைப்பை அவ்வப்போது அவசரகால அடிப்படையில் சரிசெய்வதை மட்டும் சார்ந்திருக்கக் கூடாது.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கைது;

தடைகளை உடைத்து முன்னேறியது, தி.மு.க. வின் வரலாறு!



முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு 'ட்விட்டர்' பதிவு!

சென்னை, அக். 28-

முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கைது செய்யப்பட்டதை அடுத்து 'ட்விட்டர்' பதிவிட்டுள்ள முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு, "தடைகளை உடைத்து முன்னேறிய வரலாறுதான் தி.மு.க.வின் வரலாறு!" என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது பதிவு வருமாறு:

முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

இந்த அரசின் மீது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் கோபத்தை மடைமாற்றுவதற்காகவே இந்தக் கைது நடைபெற்றிருப்பதாகக் கருதவேண்டியுள்ளது.

அடக்குமுறையினால் திராவிட முன்னேற்றக் கழகத்தை முடக்கவும் முடியாது. தடைகளை உடைத்து முன்னேறிய வரலாறுதான் திமுகவின் வரலாறு!

இவ்வாறு தமது 'ட்விட்டர்' பதிவில் தங்கம் தென்னரசு குறிப்பிட்டுள்ளார்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(26.10.2026)



1. சேலம் நகரின் மத்திய பகுதியில் நிலத் தகராறு காரணமாக காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டுவிட்டு திரும்பிய ரவுடி சரமாரியாக வெட்டி கொலை , பட்டப் பகலில் பயங்கரம் ...

2. தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் அருகே ஆழ்வார் கற்குளத்தில் கோவில் திருவிழாவில் ஏற்பட்ட கோஷ்டி மோதலில் கல்லூரி மாணவர் வெட்டிக்கொலை ...

3. மதுரை மாவட்டம் மேலூர் அருகே கீழவளவு வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்த சிறுவனை கடத்திக் கொன்ற கொடூரம்....

4. ராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளி அருகே ஆக்கிடவலசை கிராமத்தில் பிறந்து 20 நாட்கள் ஆன பெண் குழந்தை குளத்தில் மூழ்கடித்து கொலை ? ...



5. திண்டிவனம் அருகே முயல் வேட்டைக்கு சென்ற தொழிலாளி மின் வேலியில் சிக்கி பலி. போலீசுக்கு பயந்து அவரது உடலை ஏரியில் வீசிய தோட்ட காவலாளி சிக்கினார் ...

6. தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே தேக்கம்பட்டியில் உள்ள கிளை சிறையில் இருந்து சிறை காவலர்களை தாக்கி விட்டு 15 கைதிகள் தப்பி ஓட்டம் ...

7. சென்னையை அடுத்த எண்ணூர் தாழங்குப்பத்தில் மூன்று வயது சிறுமியை பலாத்காரம் செய்த த.வெ.க.வை சேர்ந்த ஆசாமி சிக்கினான்...



8. சென்னை அம்பத்தூர் அருகே இரண்டு சிறுமிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த தாயும் மகனும் சிக்கினர் ...

9. காரைக்குடியில் இன்ஸ்டாகிராமில் செய்தி அனுப்புவது தொடர்பாக ஏற்பட்ட தகராறில் இளம் பெண்ணை நடுரோட்டில் சரமாரியாக தாக்கி, மாட்டுச் சாணத்தை தலையில் ஊற்றி அவமதித்த த.வெ.க. பெண் நிர்வாகி ...

10. சென்னை ஓட்டேரியில் ஏமாத்தம்மன் கோவில் திருவிழா தேர் ஊர்வலத்தின் போது பேண்டு அடிப்பதில் தகராறு. இரண்டு பேருக்கு சரமாரியாக அரிவாள் வெட்டு ...

11. சென்னை பெரம்பூரில் சுகாதார ஆய்வாளரிடம் செல்போனை பறித்துச் சென்ற ஆசாமி சிக்கினான் ...

12. சென்னை கொடுங்கையூரில் பணியில் இருந்த மின்வாரிய ஊழியரை வழிமறித்து பீர் பாட்டிலால் தாக்கி மோட்டார் சைக்கிளை பறித்துச் சென்ற ஆசாமி ...



13. சென்னையை அடுத்த ஆதம்பாக்கத்தில் வேலையை விட்டு திரும்பிய இளம் பெண்ணை வழிமறித்து கத்தியை காட்டி ஒன்றரை சவரன் தங்கச் செயின் பறிப்பு ...

14. சென்னை கொடுங்கையூர் எம் கே.பி.நகர் பகுதியில் தடை செய்யப்பட்ட குட்கா விற்பனை அமோகம் , 50 கிலோ ஜர்தா சிக்கியது....

15. விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அருகே 7 வயது சிறுமி மாயமான வழக்கில், 15 நாட்களாகியும், துப்பு துலக்க முடியாமல் திணறும் காவல்துறை.

16. கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் அருகே ஜீமங்கலத்தில் காதல் விவகாரத்தில் இளம்பெண் அரிவாளால் வெட்டிக்கொலை.



17. திண்டுக்கல் சிறுமலை பகுதியில் கணேசன் என்பவரது தோட்டத்து வீட்டில் இருந்த ரூ. 7 லட்சம் மாயமானதாக கூறி தொழிலாளர்கள் மீது தாக்குதல் ஒருவர் பலி.

18. விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே முன்விரோதம் காரணமாக இளைஞருக்கு அரிவாள் வெட்டு.

பெண்களின் பாதுகாப்பு முதல் – மக்கள் பிரச்சினைகளில் த.வெ.க. அரசின் மெத்தனப் போக்கு!

திருப்பத்தூரில் மகளிர் அணி - மகளிர் தொண்டரணி சார்பில் ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர் க.தேவராஜி அறிக்கை!



திருப்பத்தூர், அக்.28-

திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

த.வெ.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்று ஆறு மாதங்கள்கூட முழுமையாக நிறைவடையாத நிலையில், தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு, பெண்களின் பாதுகாப்பு மற்றும் மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகள் குறித்து பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன.

பெண்களும் சிறுமிகளும் அச்சமின்றி வாழ்வதற்கான பாதுகாப்பான சூழலை உருவாக்குவது எந்தவொரு அரசின் அடிப்படைக் கடமையாகும். ஆனால், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான குற்றங்கள், கொலைகள், தாக்குதல்கள் உள்ளிட்ட சம்பவங்கள் குறித்த செய்திகள் பொதுமக்களிடையே கவலையை ஏற்படுத்துகின்றன. இத்தகைய குற்றங்களைத் தடுக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவும், குற்றவாளிகள் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கவும் அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுட்டிக் காட்டியதுபோல், பெண்களின் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்டதாகக் கூறப்படும் 'சிங்கப்பெண்' சிறப்புப் படையின் செயல்பாடுகள் குறித்தும், பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. குற்றங்களைத் தடுப்பதில் காவல்துறையின் செயல்பாடுகள் வலுப்படுத்தப்பட வேண்டிய நிலையில், அரசின் செயல்பாடுகளை விமர்சிக்கும் தி.மு.க. தோழர்கள் மற்றும் ஜனநாயக சக்திகள் மீது நள்ளிரவு நேரக் கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படும் புகார்களும் ஜனநாயக உரிமைகள் குறித்த விவாதத்தை எழுப்புகின்றன.

பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும், குற்றங்களைத் தடுப்பதிலும், சட்டம்-ஒழுங்கைப் பேணுவதிலும் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பதே கழகத்தின் வலியுறுத்தலாகும்.

போதைப்பொருள் புழக்கம் இளைஞர்களின் எதிர்காலத்தையும் குடும்பங்களின் நிம்மதியையும் பாதிக்கக்கூடிய தீவிரமான சமூகப் பிரச்சினையாகும். பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்களைப் போதைப்பொருள் பாதிப்பிலிருந்து பாதுகாப்பதுடன், போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனையைத் தடுக்கவும் அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

போதைப்பொருள் விற்பனை வலையமைப்புகளைக் கண்டறிந்து சட்டத்தின் முன் நிறுத்துவதோடு, இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்த வேண்டும். போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக அரசு அளிக்கும் வாக்குறுதிகள் நடைமுறையில் எந்த அளவுக்குச் செயல்படுத்தப்படுகின்றன என்பதையும் வெளிப்படையாக எடுத்துரைக்க வேண்டியது அவசியமாகும்.

த.வெ.க. அரசின் கடந்த ஐந்து மாத கால நிர்வாகத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு தொடர்பாகப் பொதுமக்களிடையே கவலைகள் எழுந்துள்ளன. அரிசி, பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் உள்ளிட்ட பொருட்களின் விலை உயர்வு, நியாய விலைக் கடைகளில் பொருட்கள் கிடைப்பதில் ஏற்படும் தட்டுப்பாடு, காய்கறிகள் மற்றும் அன்றாடத் தேவைக்கான பொருட்களின் விலையேற்றம் ஆகியவை ஏழை, எளிய மற்றும் நடுத்தரக் குடும்பங்களின் பொருளாதாரச் சுமையை அதிகரிக்கின்றன.

ஆவின் பால் கொள்முதல் விலை தொடர்பான மாற்றங்களும் குழப்பங்களும் பால் விலை மற்றும் விநியோகம் குறித்த கவலைகளை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது. இதன் தொடர்ச்சியாகத் தனியார் பால் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் குடும்பங்களின் செலவினங்களைப் பாதிக்கும் வகையில் உயர்வதாகப் புகார்கள் எழுகின்றன.

அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய், பால், காய்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் நியாயமான விலையில் தடையின்றிக் கிடைப்பதை அரசு உறுதிசெய்ய வேண்டும். விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, குடும்பங்களின் அன்றாட வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டும்.

மின்கட்டண உயர்வு குறித்த கவலைகளுடன், அறிவிக்கப்படாத மின்வெட்டு மற்றும் மின்பற்றாக்குறை தொடர்பான புகார்களும் மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்துகின்றன. வீடுகள், சிறு-குறு தொழில் நிறுவனங்கள், வணிகர்கள் மற்றும் விவசாயிகள் எனப் பல்வேறு தரப்பினரும் தடையற்ற மின்சார விநியோகத்தை நம்பியுள்ளனர்.

ஒருபுறம் மின்கட்டணச் சுமை அதிகரிப்பதாக மக்கள் கவலை தெரிவிக்கும் நிலையில், மறுபுறம் மின்சார விநியோகத்தில் ஏற்படும் தடைகள் அன்றாட வாழ்க்கையையும் தொழில் நடவடிக்கைகளையும் பாதிக்கக்கூடும். எனவே, தேவையான மின்சாரத்தைத் தடையின்றி வழங்குவதற்கான திட்டங்களை அரசு முன்னெடுக்க வேண்டும். மின்வெட்டுப் புகார்களுக்குத் தீர்வு காண்பதுடன், மின்கட்டணக் கொள்கை தொடர்பான மக்களின் கேள்விகளுக்கும் உரிய விளக்கமளிக்க வேண்டும்.

பெண்களின் பாதுகாப்பு, சட்டம்-ஒழுங்கு, போதைப்பொருள் ஒழிப்பு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் சீரான மின்சார விநியோகம் ஆகியவை ஒவ்வொரு குடும்பத்தின் அன்றாட வாழ்க்கையையும் நேரடியாகப் பாதிக்கும் முக்கியமான மக்கள் நலப் பிரச்சினைகளாகும். இவற்றுக்குத் தீர்வு காண வேண்டிய அரசின் பொறுப்பை வலியுறுத்தும் வகையிலும், மக்களின் கவலைகளை ஜனநாயக வழியில் வெளிப்படுத்தும் வகையிலும் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

எனவே, திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த மகளிர் அணி நிர்வாகிகள், மகளிர் தொண்டரணியினர், கழகத்தின் அனைத்து அணிகளையும் சேர்ந்த மகளிர், கழக மகளிர் நிர்வாகிகள் மற்றும் கழக மகளிர் அனைவரும் அக்டோபர் 31-ஆம் தேதி சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் திருப்பத்தூர் நகரில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாகக் கலந்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு தனது அறிக்கையில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் க. தேவராஜி தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சி.டி. தண்டபாணி

அக்டோபர் 28 (2001)



கோவை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.

நாடாளுமன்ற உறுப்பினராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1996ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராகவும், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



சிவகங்கை மாவட்டம் காளையார் கோவிலில் மாமன்னர் மருதுபாண்டியர்களின் 225வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவர்களது நினைவிடத்தில் மாநில மகளிரணி துணை செயலாளர் – முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பவானி ராஜேந்திரன் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். உடன்மருத்துவர் எம்.எஸ்.கே.ஈஸ்வரபிரசாத், சுபாஷ்சந்திரபோஸ் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.